**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 81/2024**

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகம் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) 1ம் பிரதிவாதி சுப்பம்மாள் கணவர் பெயர் ராஜலிங்கம். ராஜலிங்கத்தின் தகப்பனார் பெயர் மாணிக்கம் என்றால் சரிதான். மாணிக்கம் மனைவி சின்னம்மாள் என்றால் அதுபற்றி தெரியாது. மாணிக்கத்தின் தகப்பனார் பெயர் ராஜலிங்கம் என்றால் அதுபற்றி தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் அங்கமுத்து என்றால் அதுபற்றி தெரியாது. 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் சிறும்பாயி என்றால் அதுபற்றி தெரியாது. அங்கமுத்து உடன் பிறந்தவர்கள் சுப்பன், கருப்பன் என்றால் அதுபற்றி தெரியாது. அங்கமுத்து தகப்பனார் பெயர் வீரப்பன் ஆசாரி என்றால் அதுபற்றி தெரியாது. 1 முதல் 4 பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் தங்கள் உறவுமுறை மற்றும் முன்னோர்கள் பற்றி கூறியுள்ளனர். பின்னிட்டு அதைப்பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

2) வையாபுரி மகன்கள் 28.05.1948ல் ராஜலிங்கம் மகன் மாணிக்கம் ஆசாரிக்கு புலஎண் 228/4ல் 96 செண்ட் நிலத்தை விலைக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 96 செண்ட் நிலத்தின் வடபுறம் ரோடு உள்ளது என்றால் சரிதான். கிழக்கே வீரப்பன் ஆசாரி நிலம் உள்ளது என்றால் சரியல்ல, V.அங்கமுத்து ஆசாரி நிலம் உள்ளது. கிழபுறம் உள்ள நிலம் அங்கமுத்து ஆசாரியுடையதா என்றால் ஆமாம். தெற்கே மாரியாயி நிலம் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்கே நாவலடி கருப்பன் ஆசாரி நிலம் உள்ளது என்றால் சரியல்ல, இருளாண்டி ஆசாரியுடையது. இருளாண்டி ஆசாரியின் தகப்பனார் பெயர் என்னவென்றால் அதுபற்றி தெரியாது. ஆறுமுகம் ஆசாரியின் மகன் மாணிக்கம் ஆசாரி எனது தகப்பனார். எனது தகப்பனார் 06.04.1970ல்

சர்வே எண் 229/2 ல் ஒரு ஏக்கர் 41 செண்ட் நிலத்தை விற்றுள்ளாரா என்றால் இல்லை, 06.04.1970 ல் சர்வே எண் 229/1 ல்தான் விற்றுள்ளார், எவ்வளவு இடம் என தெரியாது.

3) எனது தகப்பனாருக்கு ஏற்கெனவே சொத்து இருந்துள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் விற்ற சொத்தை 17.03.1970 ல் கருப்பன் ஆசாரி குமாரன் பழனியாண்டி ஆசாரி வாங்கியுள்ளரா என்றால் அதுபற்றி தெரியாது. எனது தகப்பனாரிடம் இருந்து விலைக்கு வாங்கியுள்ள சிறும்பாயி அந்த சொத்தை வைத்திருக்கிறாரா என்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண் 228 என்பது 1 முதல் 7 வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 228 ற்கு மேற்கு புறம் சர்வே எண் 221 உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண் 228 ற்கு வடக்கே சர்வே எண் 227 உள்ளதா என்றால் இல்லை, கிழமேல் ரோடு உள்ளது. மேற்படி ரோடு உள்ள பகுதியின் சர்வே எண் என்னவென்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண் 228 ற்கு கிழக்கே என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது, அதன் சர்வே எண் தெரியாது.

4) சர்வே எண் 228 ற்கு தெற்கே என்ன உள்ளதென்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண் 228/1 முதல் 7 வரையிலான உட்பிரிவுகளின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 228/4 என்பது 94 செண்ட் ஆகும், அதுமட்டும் தான் தெரியும். சர்வே எண் 228/1 என்பது மேற்குபுறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதை ஒட்டி கிழக்குபுறம் 228/2, 228/3 முதல் 228/7 வரை உள்ளது. சர்வே எண் 228/4 ல் கிழக்கே உள்ள சர்வே எண் 228/5A யாருடைய நிலம் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்கே உள்ள சர்வே எண் 228/3 யாருடைய நிலம் என்றால் இருளாண்டி நிலம். யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண் 228/5A யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

5) சர்வே எண் 228/4 யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ராஜலிங்கம் ஆசாரி பெயரில் உள்ளது. அவர் போலியாக பட்டா ஏற்படுத்திக் கொண்டார்.

அந்த பட்டா எண் 776 ஆகும். பட்டா எண் 776 ஆனது 2017ம் வருடம் போலியாக ஏற்படுத்தப்பட்டது. 2017ம் வருடம் ஏற்பட்டது என்பதற்கான ஆதாரம் உண்டா என்றால் இல்லை. 2016ல் சர்வே எண் 228/4ற்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. 1984, 1985ம் வருடத்தில் நிலவுடமை மேம்பாடு திட்டம் வந்ததா என்றால் அதுபற்றி தெரியாது. வழக்குரையில் சர்வே எண் 228/4ற்கு குறிப்பிட்டுளள 0.94 என்பது ஹெக்டேர் அளவு ஆகும். பொதுவாக ஒரு ஹெக்டேர் என்பது எவ்வளவு ஏக்கர் என்றால் 2.47 ஏக்கர் ஆகும். வழக்குரையில் கண்டுள்ள நான்கெல்லை விபரம் எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அ பதிவேட்டில் உள்ளதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன்.

6) வழக்குரையில் தாவா சொத்தின் தெற்கே பழனிச்சாமி நிலம் கிழக்கே சுப்பன், நாகமுத்து நிலம், மேற்கே சுப்பிரமணி, நாகமுத்து நிலம் என குறிப்பிட்டுள்ளது சரியா, தவறா என்றால் தவறாகும். என்னிடம் காட்டப்படும் அ பதிவேட்டில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் உள்ள சர்வே எண்ணை வைத்து சொல்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள அ பதிவேட்டில் வடக்கில் ரோடு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 228/4ற்கு தெற்கே என்ன உள்ளது என அ பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 228/4 நிலத்திற்கு வா.சா.ஆ.1 ஒரு ஆவணம் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 யார், யாருக்கு எழுதியது என்றால் 1ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு எழுதிய போலியான ஆவணம் ஆகும். வா.சா.ஆ.8 எந்த சர்வே எண் சம்பந்தப்பட்டது என்றால் சர்வே எண் 228/4 சம்பந்தப்பட்டது.

7) வா.சா.ஆ.8 பூர்வீகமாக பாத்தியப்பட்டது என கண்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் உள்ளது, அது தவறானதாகும். மேற்படி ஆவணத்தில் மாணிக்கம் ஆசாரி பெயரில் பட்டா எண் 776 உள்ளதாக கண்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் உள்ளது, அது தவறாகும். வா.சா.ஆ.8 ஆவணத்தை நான்

எப்போது வாங்கினேன் என்றால் 2022ல் வாங்கினேன். 2022ல் வா.சா.ஆ.8 ஆவணம் ஏற்பட்டது தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 என்பது யார், யாருக்கு எழுதிக் கொடுத்தது என்றால் 1ம் பிரதிவாதி குடும்பத்திற்குள் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம். வா.சா.ஆ.9 ஆவணம் 2022ல் தான் வாங்கினேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.9 டன் மாணிக்கம் ஆசாரி பெயரில் உள்ள பட்டா எண் 776 இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது போலியான பட்டா ஆகும். சர்வே எண் 228/4 ராஜலிங்கம் மகன் மாணிக்கம் ஆசாரிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 228/4 நிலத்திற்கு கடந்த 75 வருடங்களாக தீர்வை செலுத்தியிருக்கிறேனா என்றால் இல்லை.

8) அ பதிவேடு எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 1962, 1963ல் ஏற்பட்டது. வா.சா.ஆ.1ல் வருடம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 அவணத்திற்கு பின்னிட்டு தற்போது வரை என் குடும்பத்தார் பெயரில் ஏதாவது வருவாய்துறை ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. 1962, 1963ற்கு பின்னிட்டு எப்போது மாணிக்கம் ஆசாரி பெயருக்கு மாற்றப்பட்டது என்றால், 22.03.2017ம் தேதி மாற்றப்பட்டுள்ளது. மேற்படி தேதி எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள பட்டாவின் அடிப்படையில் சொல்கிறேன். 22.03.2017 அன்று வா.சா.ஆ.9 ஆவணத்திற்கு கண்டுள்ள பட்டா இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தேதியாகும். மேற்படி தேதியை நான் கற்பனையாக சொல்கிறேன் என்றும், கடந்த 75 வருடங்களாக மாணிக்கம் ஆசாரி பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 உண்மையான உரிமையாளரிடம் இருந்து முறையாக கிரையம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, போலியான பத்திரமாகும்.

9) வா.சா.ஆ.9 என்ற விடுதலை பத்திரமும் உண்மையான உரிமையாளர்களிடையே ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 8 முதல் 12 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரை விபரம் தெரியுமா

என்றால் தெரியாது. பட்டா எண் 776 சுமார் 50 வருடங்களுக்கு முன்பே 1 முதல் 4 பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி நாகமுத்து மற்றும் அவரது தகப்பனாருக்கு தலைமுடி சிவப்பாக இருந்த காரணத்தினால் இருவரையும் செம்பட்டை ஆசாரி என அழைப்பார்களா என்றால் அதுபற்றி தெரியாது. சுப்பிரமணி மரஆசாரி வேலை செய்கிறாரா என்றால் அதுபற்றி தெரியாது. அவருக்கு உடல் ரீதியாக பாதிப்பு ஏதாவது உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. எனது சகோதரிகள் மற்றும் தமிழக அரசு இவ்வழக்கின் அவசிய தரப்பினர் என்றால் சரியல்ல. வருவாய்துறையில் மனு கொடுத்தேனா என்றால் மாவட்ட வருவாய் அலுவலரிடம் கொடுத்தேன். எப்போது கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. அதன் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10) நான் கொடுத்த மனுவின் பெயரில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தங்களது உரிமை ஆவணங்களை சமர்ப்பித்தனர் என்றும், அந்த விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகையோ, பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளையோ இந்த வழக்கில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1முதல் 5 பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றும், அவர்களுக்கு இடையூறு கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய்துறைக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**